செறிவூட்டப் பெற்ற
"புதிய நீமியா உரம்"
★ மண் வளமாக்கி
★ பீடை கொல்லி
★ விளைச்சல் பெருக்கி
★ இயற்கையோடு இயைந்தது.
மில்க்வைற் உற்பத்தி

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

"மில்க்வைற் சலவைப் பவுடர்"
அவசர உலகில் திடீர் சலவைக்குப் பாவியுங்கள்.
25 வெற்றுப்பக்கற்றுகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 04 சனிக்கிழமை (18 - 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 111

## சந்திரிகாவுக்கு தலைவர் பிரபா கடிதம்

# அன்றாட பிரச்சினைகள் தொடர்பான முடிவை மீள்பரிசீலனை செய்ய அரசுக்குக் காலக்கெடு!

### கேரளா முதல்வர் கருணாகரன் ராஜினாமா!

திருவனந்தபுரம், மார்ச் 18

பிரதமர் நரசிம்மராவின் நெருங்கிய சகாவான கேரள முதலமைச்சர் கருணாகரன் முதலமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்திருக்கிறார்.

உட்கட்சி நெருங்குதல் காரணமாகவும் —

கேரளத்தில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் — முஸ்லிம் லீக் கூட்டணியின் சட்டமன்ற உறுப்பினர்களின்

[6 ஆம் பக்கம் பார்க்க]



## சாதகமான பதில் இல்லையேல் சமாதானப் பேச்சுகுறித்து வேதனையான முடிவு எடுக்க நேரிடும் என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

"எமது மக்களின் அன்றாட — அவசியப் பிரச்சினைகள் — தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள முடிவை சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக மீள்பரிசிலனை செய்யுமாறு நாங்கள் உங்களை மீண்டும் வேண்டிக் கொள்கின்றோம்.

1995 மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில், சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதா இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவோம்"

= இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் பிந்திய கடிதத்துக்குரிய தமது பதிலை தலைவர் பிரபாகரன் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:-

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ்ப்பாணம்,
16 - 03 - 1995.

கனம் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,
சிறிலங்கா ஜனாதிபதி,
கொழும்பு,

அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,

உங்கள் 09-03-1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி. உங்களது கடிதத்தின் முதற்பகுதி விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் உள் அடக்கம் பற்றி குறிப்பிடுகின்றது. ஒரு நடுவரின் மத்தியஸ்த்துவம் சம்பந்தமாக நீங்கள் தெரிவித்த யோசனையை இந்த அறிக்கை திரிபுபடுத்தி இருப்பதாக எழுதியிருக்கின்றீர்கள். இந்த விடயம் சம்பந்தமாக நான் உங்களுக்கு அதிகாரபூர்வமான முறையில் எழுதிய கடிதத்தை நீங்கள் கருத்தில் எடுத்துக் கொள்வது தான் உகந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஓர் உண்மையான சமாதான சூழல் ஏற்படவேண்டும் எனவும், மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் எனவும், நாம் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டமைக்கு சில பிரத்தியேக காரணிகள் உள்ளன.

### போர் நிறுத்தத்துக்கான எமது யோசனையை அரசு பாரதூரமான விடயமாக எடுக்கவில்லை

மிகவும் சிக்கலான இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு சில சிரமங்கள் ஏற்படுவதுடன் காலதாமதமும் ஆகலாம். இதனால் தான் ஒரு நிலையான போர் நிறுத்தத்தின் அடிப்படையில் நின்றுபிடிக்கக் கூடிய ஒரு சமாதான சூழல் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்பது எமது கருத்து. முன்பு நிகழ்ந்த அரசியல் பேச்சுக்கள் நிலையற்ற போர் நிறுத்தங்களாலும் அதனால் விளைந்த போர் நிறுத்த மீறல்களாலும் இடைநடுவே முறிந்து போயின என்பதை நீங்கள் அவதானித்திருக்கலாம். எனவே நிலையான போர் நிறுத்தத்தைத் தோற்றுவிக்கும் எமது யோசனையை உங்களது அரசு பாரதூரமான விடயமாக எடுக்கவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அரசாங்கத்தின் அணுகுமுறையில் இருந்து இது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. போர் நிறுத்தம் என்ற கோட்பாட்டை அதன் முழுமையான அர்த்த பரிமாணத்தில் பிரயோகிப்பதற்கு அரசு மறுத்ததுடன் மோதல் தவிர்ப்பு என்ற சொற்பதத்தை பிரயோகிக்க விரும்பியது. இது ஓர் இடைக்கால சண்டை தவிர்ப்பு நிலைமையையே குறிக்கும். அத்துடன் போர் நிறுத்த செயற்பாட்டு வழிமுறை பற்றி விரிவாக ஆராய்ந்து ஓர் இணக்கப்பாடு காணவேண்டும் என நாம் பல தடவைகள் விடுத்த கோரிக்கைகளையும் அரசாங்கம் உதாசீனம் செய்து வந்திருக்கின்றது. ஒரு நிலையான சமாதான சூழலை உருவாக்கும் செய்வதில் உங்களது அரசிற்கு எவ்வித அக்கறையோ அல்லது சிரத்தையோ இருப்பதாகத் தெரியவில்லை.

### சமாதான சூழலை அரசு தோற்றுவிக்கும் என நம்பியே முதற்கட்டப் பேச்சுக்கு வந்தோம்

முன்னைய அரசின் இனவாத ஒடுக்குமுறைக் கொள்கையாலும், ஈவிரக்கமற்ற இராணுவ அணுகு முறையாலும் வடகிழக்கில் வாழும் எமது மக்களின் இயல்பான வாழ்வு மிகவும் மோசமான முறையில் சீர்குலைந்துள்ளது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தமிழர் தாயகம் மீது இராணுவ மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நோக்கில் எமது மக்களின் சமூக- பொருளாதார வாழ்வு மீது பல்வேறு ரகமான தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. இதன் விளைவாக எமது மக்கள் தாங்கொணாத் துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளானார்கள். ஆயினும் உங்களது புதிய அரசு சமாதான மனுவுடன் ஆட்சிபீடம் ஏறிய பொழுது எமது மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கை பிறந்தது. உங்களது அரசு சமாதான சூழலையும் இயல்பு நிலையையும் தோற்றுவித்து தாம் அனுபவித்து வந்த துன்பங்களைத் துடைத்துவிடும் என எமது மக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாமும் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் என உங்களிடம் கேட்டுக்கொண்டோம். எமது மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு அவசரத் தேவைகளாக உள்ள சில முக்கிய பிரச்சினைகளை ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் நாம் சுட்டிக்காட்டியதோடு அவற்றை உடனடியாகத் தீர்த்து வைக்குமாறும் கேட்டுக்கொண்டோம். இவை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனிப்பட்ட நிபந்தனைகள் அல்ல என்பதை நாம் மீண்டும் — மீண்டும் வலியுறுத்தியதோடு, இவை மிகவும் பாதிப்பிற்குள்ளாகிய ஒரு மக்கள் சமூகத்தின் மனிதாபிமானத்தேவைகள் என்பதையும் சுட்டிக் காட்டினோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இயல்பு நிலைமைதோன்றுவதாக இருந்தால் இப்பிரச்சினைகளுக்கு உடன் பரிகாரம் காணப்படவேண்டும் என்பதையும் எடுத்துரைத்தோம்.

### இராணுவ தலைமையைத் திருப்திப்படுத்த அரசு தனது உறுதி மொழியிலிருந்து பின்வாங்குகிறது

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஆரம்ப கட்டப்பேச்சுக்களின்போது அரசாங்கம் உறுதி [illegible] அன்றாடப் பிரச்சினை [illegible] இனப்பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல் சிக்கல்களுக்கு முதன்மை கொடுக்க அரசு முனைந்தது. அரசின் இந்த நிலைப்பாட்டு மாற்றம் சம்பந்தமாக நாம் பல கடிதங்களில் சுட்டிக்காட்டியதுடன், இராணுவத் தலைமையை திருப்திப்படுத்தும் நோக்கில் தான் இந்த நிலைப்பாட்டு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் எடுத்துரைத்தோம். அத்துடன் ஒரு மக்கள் சமுதாயத்தின் ஜீவாதாரப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்கு

## மத்தியஸ்தம் வகிக்க ஆஸ்திரேலியா விருப்பம்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளில் மத்தியஸ்தம் வகிக்க ஆஸ்திரேலிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடு என்ற முறையில் தமது நாடு சமரசப் பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்யும் என்று ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் ஹரத் இவான்ஸ் தெரிவித்தார்.

இலங்கையில் சமாதான முயற்சிகளை ஆஸ்திரேலியா எப்போதும் ஆதரித்து வந்துள்ளது.

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற பேச்சுக்களின் போது கூட ஆஸ்திரேலியா மத்தியஸ்தம் செய்ய முன்வந்தது.

சமாதானப் பேச்சுக்கள் இடையூறுகள் எதுவும் இன்றி தொடர்ந்து நடைபெறுவதே உண்மையான சமாதானம் ஏற்பட வழிவகுக்கும்.

தற்போது இரு தரப்பினரிடையேயும் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையால், மக்களின் வாழ்க்கையில் ஏற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### கதிர்காமரின் வீட்டுக்கு அருகே இரு தமிழர் கைது!

#### அடிக்கடி நோட்டமிட்டனராம்

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இல்லத்துக்கு அருகில் இருக்கும் வீடு ஒன்றில் தங்கியிருந்த இரு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

அமைச்சர் கதிர்காமரின் வீட்டுக்கு அருகே அந்த இளைஞர்கள் இருவரும் அடிக்கடி நடமாடி வந்தனர் என்றும்—

அதனை நன்கு அவதானித்த பின்னரே இருவரையும் கைது செய்ததாகவும்— கறுவாக்காடு பொலீஸார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அமரசிறி தொடங்கொட யாழ்ப்பாணம் வர விருப்பம்

#### அனுமதி கோரி புலிகளுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், மார்ச். 18

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை அபிவிருத்தி குறித்து ஆராய்ந்து நேரில் விளக்கங்களைப் பெறுவதற்காக கூட்டுறவு அபிவிருத்தித் துறை அமைச்சர் திரு. அமரசிறி தொடங்கொட யாழ்ப்பாணம் வர விருப்பம் தெரிவித்துள்ளார்.

தமது விஜயத்துக்கான அனுமதியை வழங்குமாறு கோரும் கடிதம் ஒன்றை தற்சமயம் யாழ்ப்பாணம் வந்துள்ள ''ராவய''பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. விக்ரர் ஐவன் மூலம் அமைச்சர் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியுள்ளதாக அறியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சீரான உணவு விநியோகத்தை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் குறித்து இங்கு ஆராய அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

### நீரில் மூழ்கி இரு இளைஞர்கள் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச். 18

திருவடிநிலை கடலில் நேற்றுக் காலை குளிக்கச்சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் ஒருவர் மாவிட்டபுரத்தில் இருந்து இடம்பெயர்ந்து சங்கானையில் வசித்து வந்த வைத்திலிங்கம் குலேந்திரராஜா (வயது 13, என அடையாளம் காணப்பட்டார். (ஜ-3)

### மாகாணப் பணிப்பாளராக செல்வி பெரியதம்பி?

யாழ்ப்பாணம், மார்ச். 18

யாழ். கல்விவலயம் ஒன்றின் பணிப்பாளராகப் பணியாற்றும் செல்வி. தி. பெரியதம்பியை, வட - கிழக்கு மாகாணப் பணிப்பாளராக உடன் நியமிக்க வட - கிழக்கு மாகாண கல்வியமைச்சு பதில் செயலாளர் திரு. கே. தியாகராஜா முடிவு செய்துள்ளதாகத் தெரிய வந்தது.

யாழ். செயலக தொலைபேசி ஊடாக நேற்றுத் தொடர்பு கொண்ட பதில் செயலாளர் செல்வி பெரியதம்பியை உடன் இந்தப் பதவியைப் பொறுப் பேற்குமாறு கோரியதாகவும் —

இந்தப்பதவியை அவர் ஏற்க சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் —

எழுத்திலான நியமனக் கடிதம் கிடைத்த பின்னர் தாம் பதவி ஏற்பதாக அவர் பதிலளித்ததாகவும் —

நம்பத்தகுந்த வட்டாரம் ஒன்றிலிருந்து உதயனுக்குத் தெரியவந்தது. (உ-3)

### 30ஆம் திகதி நரோமா வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

திருகோணமலைக்கும் - பருத்தித்துறைக்கும் இடையில் அடுத்த 'நரோமா' பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இக்கப்பலில் பயணம் செய்ய பயணிகள் [illegible] தமது பதிவுக்கான பணத்தைச் செலுத்[illegible] (ஜ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் (வண்ணை சிவன் கோயில்)

# பூங்காவனத் திருவிழா விஞ்ஞாபனம்

காலம்:- இன்று (18 - 03 - 1995) சனிக்கிழமை

மாலை 6 மணிக்கு திருக்கல்யாணமும் திருவீதி எழுந்தருளலும்
6 மணி முதல் சிறப்புமங்கள இசை

**நாதஸ்வர விற்பன்னர்கள்**

திரு. M. பஞ்சாபிகேசன்
திரு. N.K. பத்மநாதன்
திரு. S.S. சிதம்பரநாதன்
திரு. K. பஞ்சமூர்த்தி
திரு. R. கேதீஸ்வரன்
திரு. P. நாகேந்திரன்

**லயவிற்பன்னர்கள்**

திரு. K. வீராச்சாமி
திரு. K. நித்தியானந்தன்
திரு. P. முருகதாஸ்
திரு. S. ரவீந்திரன்
திரு. T. உதயசங்கர்
திரு. S. சுதாகர்

நிகழ்ச்சியை சிறப்பிக்கவும், இறைவன் பெருங்கருணை பெறவும் அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண்ணை சிவன் தேவஸ்தானம்
18 - 03 - 1995

கனகசபை தர்மகுலசிங்கம்
விழா உபயகாரர் (சி/791)



அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995 ஆம் ஆண்டிற்கான
மகரயாழ் விருது பெறுகின்ற
வைத்திய கலாநிதி
**துரைராசா வில்லியம் ஜெயகுலராஜா**
அவர்களை
என்றென்றும் சமூகப் பணி புரிந்து
மேலும் இத்தகைய
விருதுகளுக்கு உரியவராகுக
என வாழ்த்தும்

**எஸ். எம். பெர்னான்டோ**
(இலங்கை வங்கி அருகில்)
580, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம். (சி-788)



## முத்தமிழ்ப் பட்டிமன்றம்

**24 வது தடவையாக அரங்கேறியது**

நன்றி பாராட்டுகிறோம்

17-03-95 வெள்ளி இரவு மல்லாகம் காளிகாதேவி ஆலய முன்றிலில் நடைபெற்ற

தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி இருப்பது யார் பாடலில்?

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் — கவியரசு கண்ணதாசன்

கனக நாகேஸ்வரன் M.A. — எம்.எஸ். தயாளன் B.A.
செ சத்தியமூர்த்தி B.Sc. — எஸ். கணேசலிங்கம் B.A.
பொன். மதிமுகராஜா J.P. — க கனகரத்தினம்
பக. ஸ்ரீபதி — ச. வாமன்

நடுவர்: அ. குமாரவேலு B. A.

''ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றி''

பட்டிமன்ற அமைப்பு:
பொன். மதிமுகராஜா
எம்.ஜி ஆர். இல்லம், தாவடி.

- பரிபாலன சபை -

[35762]



## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
14-01-1917

மறைவு:
28-3-1994

திதி:
18-3-95

**அமரர் சின்னப்பு குணரட்ணம்**

''ஆண்டொன்று ஆனாலும்'' ஆறிடுமோ எம் இதயம்
''ஆறாத் துயரில் எம்மை எல்லாம் ஆழ்த்தி விட்டு''
மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே
ஆண்டுகள் பல சென்றாலும் நீங்கிடுமோ!

எம் இதயத்தில் இருந்து உங்கள் நினைவுகள் என்றும் அகலா.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

திருமதி கு. பொன்னம்மா,
3 ஆம் கட்டை ஒழுங்கை,
கொக்குவில் [35765]


அரசு நடவடிக்கை எடுக்காது!

# நாங்கள் இங்கேயே சாகப்போகிறோம்!

## வேதனை ததும்ப உண்ணா விரதி

யாழ்ப்பாணம், மார்ச் 18

''எமது விடுதலை குறித்து அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எடுக்கவும் மாட்டாது. நாம் இங்கேயே சாகப்போகிறோம்''

இப்படிக் கூறினார் யுத்தக் கைதிகளில் ஒருவரான கருணாரத்தின.

உண்ணா விரதிகளை பார்வையிட்ட ஆயர் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான குழுவிடமே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் ஏற்கனவே இரண்டு தடவை உண்ணா விரதத்தை மேற்கொண்டிருந்தோம்: ஆனால் அப்போதைய அரசு எம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லை

இம்முறை மூன்றாவது தடவையாக உண்ணா விரதம் மேற்கொண்டுள்ளோம் இந்த அரசும் எமது விடுதலைக்காக இதுவரை ஒன்றும் செய்யவில்லை.

எமது விடுதலையில் அரசுக்கு உண்மையில் அக்கறையிருந்தால் கடந்த ஐந்து வருடங்கள் இங்கு நாம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிராது.

நாம் இந்த மண்ணில் சாகப் போகிறோம். இதை எமது உடன் பிறப்புக்களிடம் கூறுங்கள். அந்த உதவியை யாவது நீங்கள் எங்களுக்காக செய்தால் போதும் — என்று அவர் வேதனையுடன் கூறினார். (ஒ-3)


### சுன்னாகம் ஐயனார் ஆலய சண்டேஸ்வரர் உற்சவம்-1995

காலம்: 18-03-1995 சனிக்கிழமை பி. ப. 3மணி

நிகழ்ச்சிகள்

இரவு: 6.00 மணி குரு வணக்கம்.

7.00 மணி தினமும் தெய்வீக சொற்பொழிவாற்றிய சிவத்திரு வ. குமாரசாமிஐயா, திரு பொன். கணேசமூர்த்தி ஆகியோரைக் கௌரவித்தல்.

7.30 மணி பட்டிமன்றம்.
விடயம்; பெண்மையின் மேன்மையை பெரிதும் பேசும் இலக்கியம்

கம்பராமாயணமா — சிலப்பதிகாரமா

கம்பராமாயணம் — சிலப்பதிகாரம்
தி வேல்நம்பி — எஸ். கே. முத்துலிங்கம்
எஸ். நித்தியானந்தன் — எஸ். வாமன்
எஸ். கோக்கலே — எஸ். அருந்தாகரன்

நடுவர்: பொன். கணேசமூர்த்தி

10.00 மணி இன்னிசை வேந்தன்

**சாந்தன் இசைக்குழுவினரின்**

இன்னிசைக்கச்சேரி.

12.30 மணி நகைச்சுவைக்கதம்பம்
(தங்கவேல் குழுவினர், இளவாலை)
மேடை — ஜயாத்துரை மல்லாகம்
ஒலி — நியூலங்கா மல்லாகம்
ஒளி — மகாமாரி சுன்னாகம்.

விழா உபயகாரர்கள்.

சுன்னாகம்.
17-3-95 (8289)



## எமது இதய அஞ்சலி

யாழ் மாவட்ட சிக்கன சேமிப்பு கூட்டுறவுச்சங்க பணிப்பாளர்சபை உறுப்பினராகவும், வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பொது முகாமையாளராகவும் அளப்பரிய சேவையாற்றிய —

**பொன். சத்தியமூர்த்தி**
அவர்கள்

அகால மரணமாகியதையிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை பணிப்பாளர்களும், பணியாளர்களும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர்.

அவரின் இழப்பால் வேதனையுறும் அன்னாரின் குடும்பத்தினரின் வேதனையையும், கூட்டுறவாளரின் தவிப்பையும் ஈடுசெய்ய முடியாவிடினும் நாமும் அக்குடும்பத்துடன் அவ்வேதனையில் பங்கு பெறுவதுடன் அவரது ஆன்ம சாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

இங்ஙனம்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை
பணிப்பாளர்களும், பணியாளர்களும்.

(சி/790)


### ஓட்டுநருக்கு பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற விண்ணப்பித்தோருக்கான முதலுதவி வீதிப் போக்குவரத்துப் பயிற்சி வகுப்பு இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

தமிழீழ நிர்வாக சேவையின் மோட்டார்வாகன ஓட்டுநருக்கான அனுமதி வழங்கும் பிரிவினரால் இப் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட உள்ளன.

கடந்த 4 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தோரை இந்தப் பயிற்சி வகுப்பில் பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

### பாடசாலைகளில்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் கனிஷ்ட பிரிவு வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திரு. க. சிவநேசன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் திருமதி எஸ். இராமநாதன், பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [ஒ-14]

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச். 18

ஏழாலை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1 30 மணிக்கு நடைபெறும் (ஐ)

★ ★ ★

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு இ. கணேசராசா தலைமையில் நடைபெறும்.

அன்னை பூபதி ஞாபகார்த்த

## பொது அறிவுத் தேர்வு நாளை நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 18

அன்னைபூபதி ஞாபகார்த்த பொது அறிவுத் தேர்வு திட்டமிட்டபடி நாளை ஞாயிற்றுக்கிழமை சகல தேர்வு நிலையங்களிலும் நடைபெறவுள்ளது.

வட தமிழீழத்தைச் சார்ந்த ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இத் தேர்வுக்கு தோற்றவுள்ளனர்.

மாணவர்களுக்கான அனுமதிப் படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் கல்விக் கோட்ட ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தமிழீழக் கல்விக் கழகம் அறிவித்துள்ளது. [ஒ-14]


நல்லூர்
### ஸ்ரீ சட்டநாதர் ஆலயம் பூங்காவன உற்சவவிஞ்ஞாபனம்

மேற்படி ஆலய வருடாந்த பூங்காவன உற்சவம் இன்று [18 - 03 - 1995] சனிக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.

மாலை: 6-30 — 7-30
அம்பாள் திருநந்தவனத்தில்
கொலுவீற்றிருக்கும் காட்சி

இரவு: 8-00 — 9-00
திருக்கல்யாணவைபவமும்,
ஊஞ்சலும்

விசேட மேளக்கச்சேரி
ஈழநல்லூர்
P. S. பிச்சையப்பா P. ரவீந்திரன்
குழுவினர்

விசேட நிகழ்ச்சி
ஈழநல்லூர்
**அருணா இசைக் குழுவினரின்**
**இசைத் தேன் அமுதம்**

உபயகாரர்
நல்லூர் சங்கிலியன் மன்றம்

வாழ்த்துவோர்:
**சிவா எரிபொருள் நிலையம்**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
[35764]



யாழ்ப்பாண மாநகர சபை

## கேள்வி அறிவித்தல்-1995

இதன் கீழ் அட்டவணைப் படுத்தப்பட்ட இறைச்சிக் கடைகள் 01-04-95ஆம் திகதி முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கு கேள்விகள் மீளக் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 100/- ம் மீளப் பெறக்கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 2500/- ம் செலுத்தி 23-3-95ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விகள் 24-03-95 ஆம் திகதி வெள்ளி கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை யாழ். மாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை — 1

| இறைச்சிக் கடைகள் | குத்தகை காலம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 9 மாதம் | 4275-00 | 112-50 |
| 2. குருநகர் ஆட்டிறைச்சிக் கடை இல. 7 | 9 மாதம் | 10375-00 | 195-00 |
| 3. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 8 | 9 மாதம் | 3130-00 | 200-00 |
| 4. நாவாந்துறை ஆட்டிறைச்சிக் கடை இல. 9 | 9 மாதம் | 3975-00 | 200-00 |
| 5. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை இல. 5 | 9 மாதம் | 6080-00 | 200-00 |

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1995-03-17.

(சி-789)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் தடை நேர்மைக்கு ஒரு சோதனை

கொழும்பு, மார்ச் 18
வடபகுதித் தமிழர்களுக்கு நீடித்து வரும் பொருளாதாரத்தடை அரசின் நேர்மையைச் சோதிக்கும் முக்கிய விடயமாக உள்ளது.

இவ்வாறு அண்மையில் யாழ். வந்து திரும்பிய பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்வி தனது ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் கூறியுள்ளார்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததும் இந்த ஆண்டு ஆரம்பத்தில் 22 பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டது.

இதனால் அரசு எதிர்பார்த்தது போல் பெரிய விளைவுகள் எதுவும் தோன்றிவிடவில்லை. தாண்டிக்குளம் பகுதியூடாக போதுமான வாகனங்களை இராணுவம் அனுமதிப்பதில்லை.

ஆயுதப் போர் தொடங்கு முன் வடபகுதிக்கு 300 வாகனங்களும் 6 ரயில் வண்டிகளும் பொருள்களை ஏற்றி வந்தன. ஆனால் தற்போது 20 தொடக்கம் 30 வாகனங்களே பொருள்களுடன் அனுமதிக்கப்படுகின்றன. இதனால் பொருள்கள் வடபகுதி மக்களுக்கு தாராளமாகக் கிடைப்பதில்லை.

ஆனாலும் தடை நீக்கப்பட்ட பொருள்கள் சிலவற்றின் மீது இராணுவம் தனது சொந்தக் கட்டுப்பாட்டை விதித்து வருவதாக புலிகளும் மக்களும் குற்றஞ் சுமத்தி வருகின்றனர்.

முக்கியமாக சிமெந்து தடை நீக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக கொழும்பில் 250 ரூபாவுக்கு விற்கப்படும் போது யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ரூபா வரை விற்கப்படுகிறது

வாகன சாரதிகளுடன் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது திருமதி சந்திரிகா குமாரதுங்கா அதிகாரம் இங்கு செல்லுபடியாகாது. இப்பகுதி இராணுவத்தான் அதிகாரத்தில் உள்ள தென இளநிலை இராணுவ அதிகாரிகள் கூறுவதாக தெரிவித்தனர்.

எரிபொருள் குறிப்பாக டீசல் மற்றுமொரு பெரிய பிரச்சினையாகும். இதுவும் இராணுவ பயன்பாடுகளுக்கு பயன்படுகிறது எனக்கூறி தடை செய்யப்பட்டுள்ள பொருள்களின் பட்டியலில் இருக்கிறது.

உண்மையில் உயர்தர எரிபொருள் விடுதலைப் புலிகளிடம் இருக்கிறது. ஆனால் கஷ்டப்படுவது பொதுமக்களே.

இவ்வாண்டு நிலைமை மிக மோசமடைந்துள்ளது. முன்பெல்லாம் கூடியளவு எரிபொருளை வாகனங்களில் நிரப்பி எடுத்துவர இராணுவம் அனுமதித்தது. ஆனால் இப்போது வாகனம் ஒன்றுக்கு 40 லீற்றர்களுக்கு மேல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

விடுதலைப் புலிகளின் முக்கியமான கோரிக்கைகளுள் ஒன்றைக் கூறுங்கள் எனக் கேட்டபோது, திரு அன்ரன் பாலசிங்கம், "பூநகரி இராணுவ முகாமை அகற்றுவதிலும் பார்க்க மிகவும் முக்கியமானது எரிபொருள், உர வகைகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மீது நீடித்து வரும் தடைகளை நீக்குவது ஆகும்"— எனக் கூறினார்.

வடபகுதிக்கு முற்றான மின்சாரத்தை விநியோகிப்பதற்கு 90க்கும் மேற்பட்ட ஜெனரேற்றர்களும் 12 ஆயிரம் பரல் டீசலும் தேவை. எனவே எரிபொருள் மீதான தடையை நீக்காது எந்தவித புனருத்தாரணப் பணிகளை மேற்கொள்வதும் அர்த்தமற்றது என புலிகள் முன்வைக்கும் வாதத்தில் வலுவிருக்கிறது

— இவ்வாறு அக்கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

## பதவி நீக்கப்பட்ட பயிலுநர் அரச அதிபர் ஊடாக மகஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 18
ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் அரசாங்க திணைக்களங்கள் மற்றும்அரச சார்பு நிறுவனங்களில் பயிநர்களாக சேர்த்து கொள்ளப்பட்டு பின்னர், தற்போதைய அரசாங்கத்தினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட— யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பயிலுநர்கள் யாழ். அரசஅதிபர் ஊடாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 226பயிலுநர்கள் கையொப்பமிட்டுள்ள இம்மகஜர் நேற்று முன் தினம் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் பிரதிகள் ஜனாதிபதி மற்றும் தேசிய தொழிற் பயிற்சி வழங்கு சபையின் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ஐ-14-4)

வலி. தெற்கு செயலக பிரிவில்

## புத்தாண்டை முன்னிட்டு மாணவருக்குப் போட்டிகள்

வலிகாமம், தெற்கு மார்ச் 18
எதிர்வரும் தமிழ் புத்தாண்டை ஒட்டி வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் போட்டிகளை நடத்தவுள்ளது.

பேச்சு, கிராமிய நடனம் ஆகிய போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படும்.

கவிதை, நாட்டார் பாடல் ஆகிய போட்டிகள் பொதுமக்கள் மத்தியில் நடத்தப்படும்.

அத்துடன் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

கரப்பந்தாட்டம், தாச்சி, கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் ஆண்களுக்கும்— கயிறடித்தல், தாச்சி ஆகிய போட்டிகள் பெண்களுக்கும் நடத்தப்படவுள்ளன.

வலிதெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குள் உள்ள பாடசாலை மாணவர்களும், பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களும் மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கலாம்எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-152]

## கடும் வெப்பம் மே வரை நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 18
தற்போது நிலவும் கடும் வெப்பமான காலநிலை எதிர்வரும் மே மாதத்தில் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பிக்கும் வரை நீடிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டுக்கு மேலாக சூரியன் உச்சிக்கு வருவதே வெப்பம் அதிகரித்திருப்பதற்கான காரணமாகும். [ஐ]

## சோதிடர் ஒன்றிய வாராந்த கூட்டம்

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் வழமைபோல் நடைபெறும்.

"எனது சோதிட அனுபவங்கள்" என்னும் தலைப்பில் திரு எஸ். பாண்டித்துரை உரைநிகழ்த்துவார். "கல்வி காரகன் புதனின் நீசத்தன்மை கல்வியைப் பாதிக்குமா? என்னும் பொருள் பற்றி திரு. ஐ வைத்தியநாதர் ஆய்வுரை நிகழ்த்துவார்.

## ஓவியகண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 18
இலங்கையிலுள்ள பெரும்பாலான பறவைகளின் கட்டமைப்புகளையும் இலங்கையின் பல்வேறு பிரதான வளங்களையும் சித்திரிக்கும் இலவச வண்ண ஓவியக் கண்காட்சி நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ் பல்கலைக்கழக உயிரியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. காலை 9-30 மணிமுதல் பிற்பகல் 4-30 மணிவரை கண்காட்சி இடம்பெறும்.

கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சி. மகேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

இவ் ஓவியங்கள் யாவும் பேராசிரியை திருமதி நவமணி செல்வராஜாவின் கைவண்ணத்தால் உருவானவை ஆகும். (ஐ-14)

## விவசாயிகளுக்கு என்ஜின் ஒயில்

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் கொழும்பில்இருந்து 'என்ஜின் ஒயிலை' தருவித்து விவசாயிகளுக்கு நியாய விலையில் விநியோகித்து வருகின்றது.

ஒரு லீற்றர் என்ஜின் ஒயில் 65 00 ரூபா விலையில் வழங்கப்பட்டு வருவதாக சங்க தலைவர் எஸ். செல்வரத்தினம் தெரிவித்தார்.

## இனப் பிரச்சினை கருத்தரங்கில் சந்திரிகா

இப்பிரச்சினை, அரச மொழிக் கொள்கை ஆகியவை சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது இக் கருத்தரங்கிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## லொறி உரிமையாளர்கள் கலந்துரையாடல்

யாழ். மாவட்ட லொறி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கோண்டாவிலிலுள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறும்.

சகல லொறி உரிமையாளர்களையும் இதில் கலந்து கொள்ளும்படி போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு கேட்டுள்ளது [ஒ-14]

## சிறார்களுக்கு இலவசசிகை அலங்காரம்

பொம்மைவெளியில் அமைந்துள்ள சிறுவர் போஷாக்குப் பூங்காவில் இருக்கும் 200 சிறார்களுக்கும் இலவச சிகை அலங்காரம் செய்யப்பட்டு வருகிறது.

பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க யாழ். கிளையைச் சேர்ந்த அங்கத்தினர்கள் வாரந்தோறும் நிலையத்திற்குச் சென்று சிறார்களுக்கு இலவச சிகை அலங்காரத்தைச் செய்து வருகின்றனர். [ஒ-51]

## சந்திரக் கோளம் முழுவதும் தூய்மையான தங்கம்!

### மறைக்கப்பட்ட தகவல் வெளியானது

கொழும்பு, மார்ச் 18
சந்திரன் முழுமையான தங்கப்பந்தாக காணப்படுகிறது; அதன் வெளிப்பரப்பில் காணப்படும் கற்பாறையில் 20 அடி முதல் 30 அடி வரையான பகுதியை அகற்றினால் மிகுதி முழுவதும் 18 கரட் தங்கம் கிடைக்கும்.

இத்தகவலை முன்னாள் விண்வெளிக்கல, ஆராய்ச்சிக் கழக நிபுணர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

இத்தகவல்கள் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பே, நாஸா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தெரியும் என்றும்—

ஆனால் இத்தகவலை இது காலவரை அந்நிறுவனம் மறைத்து வைத்திருந்ததாகவும் அண்மைக்காலத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதி, அப்பலோ –11 என்ற விண்வெளிக்கலம், விண்வெளிக்குச் சென்று திரும்பியது.

அப்பொழுதே, சந்திரன் முழுமையான தங்கக் கோளம்; அதனை கருமையான கற்பாறைகள் சூழ்ந்துள்ளன என்ற விவரம் 'நாஸா' நிலையத்தினருக்கு தெரியவந்தது.

விண்வெளி வீரர்களான அல்டிறின், ஆம்ஸ்ரோங் ஆகியோர் இது தொடர்பான விவரங்களை விண்வெளியிலிருந்து கொண்டுவந்து ஆய்வுகளை நடத்தினர்.

அப்பொழுதேசந்திரனில் அதிகளவு தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 1970ஆம் ஆண்டு பெப்ரவரி 23ஆம் திகதி, விண்வெளியில், இரகசிய ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது கம்பியூட்டர்கள், நுண்ணிய துணைக் கருவிகள் என்பனவும் கொண்டு செல்லப்பட்டன.

இதன்பின், சந்திரனைச் சுற்றியிருந்த தாதுப் பொருள்கள் குறித்த ஆய்வுகள் அடங்கிய பதிவேடுகளுடன் இவ் விண்வெளிக்கலம் பூமிக்குத் திரும்பியது.

500 கோடி சதுர மைல் கொண்ட பகுதி முழுவதும் தூய்மையான தங்கம் நிறைந்து காணப்படுவதாகவும் தெரிய வந்தது.

இத் தகவலை இதுவரை வெளியிடாமல் மறைத்து வைத்திருந்தமைக்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன.

விண்வெளியில் தங்கச் சுரங்கத்தைத் தேடி ஏனைய நாடுகளும் போட்டி போடத் தொடங்கினால், நாடுகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டு இரத்தக்களரி தோன்றக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு.

அத்துடன் தங்கத்தின் விலை மண்ணுச்குச் சமமாக சரிந்துவிடும் என்பதுடன், எல்லோராலும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய பண்டமாகவும் மாறிவிடும்.

இந்தக் காரணங்களுக்காகவே சந்திரனில் தங்கம் நிறைந்திருக்கும் தகவல் மறைக்கப்பட்டு வந்தது. (ஐ-5)

## தண்டப் பணம் செலுத்திய தமிழ் ரயில் பயணிகள்!

யாழ்ப்பாணம், மார்ச் 18
கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி இரவு தபால் ரயிலில் பயணம் செய்த நான்கு தமிழர்கள் 'டிக்கெட்' பரிசோதனையின் போது பிடிபட்டு தண்டப் பணம் செலுத்தினர்.

மூன்றாம் வகுப்பு பயணச் சீட்டுப் பெற்று இரண்டாம் வகுப்பில் இருந்து பயணத்தை மேற் கொண்ட இவர்கள் ரயில் பரிசோதகர்களின் திடீர் பரிசோதனையின் போது மாட்டிக் கொண்டனர் (ஒ-17)

தாதியர் பேரணிக்கு

## "ஜெயவேவா" கூறிய அமைச்சர் பௌஸி

கொழும்பு, மார்ச். 18
சுகாதார அமைச்சு மீதான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கையில் —

நாடாளுமன்றத்துக்கு அண்மை வரை — நாடாளுமன்றத்துக்குச் செல்லும் ஸ்ரீ ஜெயவர்த்த புர பாதையின் நெடுகிலும் — இருமருங்கிலும் தாதியர்கள் அணிவகுத்து நின்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

அச்சமயம் அவ்வழியே நாடாளுமன்றத்துக்குச் சென்ற சுகாதார அமைச்சர் பௌசி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரை நோக்கி "ஜெயவேவா" என்று கூறிக்கொண்டு கையசைத்துச் சென்றதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

டாக்டர்கள் சங்கத்தின் விருப்பு — வெறுப்புகளை மட்டுமே கவனத்தில் எடுத்துக் கொண்டு ஏனைய சுகாதார சேவையாளர்களுக்கு சுகாதார அமைச்சு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுவதாகவும் —

அதனை ஆட்சேபித்து — எம். பிக்களின் கவனத்தைக் கவர — தாங்கள் இப்போராட்டத்தை நடத்தியதாக தாதியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## புலிகளின் குரல் வானொலியில்

18 — 03 — 1995
சனி இரவு
★ 8-02 — புரட்சிக்குரல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம் — நிகழ்ச்சியில் "இன்றைய சிறுகதைகள்"

19 — 03 — 1995
ஞாயிறு காலை
★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
சனி மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடிவினாப் போட்டி
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## பளைக்கு மேலதிகமாக மினிபஸ் சேவை

தென்மராட்சி சிற்றூர்தி சேவைச்சங்கத்தினர் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து பளை, சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு மேலும் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

சாவகச்சேரியிலிருந்து பளைக்கு மாலை 4.15 மணிக்கும், 5 15மணிக்கும் இரு புதிய சேவைகளையும் சாவகச்சேரியிலிருந்து சுன்னாகத்திற்கு முற்பகல் 10.00 மணிக்கு ஒரு சேவையினையும் நடத்தி வருகின்றனர்.

## பட்டமளித்து கௌரவம்

சிற்பக் கலைஞர் திரு. சி. செந்தூர்ராஜா, 'சிற்பச் சக்கரவர்த்தி' எனும் பட்டம் அளித்து அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

கழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் சிற்ப வேலைகளை சிறப்புறச் செய்த இவரின் கலைத்திறனைப் பாராட்டியே இப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது

இப் பட்டத்தை வழங்கிய ஆலய பரிபாலன சபை, அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தது

திரு. செந்தூர்ராஜா இலங்கையின் பலபாகங்களிலும் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களில் சிற்ப வேலைகளை செய்தவர் என்பதும் —

இவரின் கலைத்திறனைப் பாராட்டி "சிற்பக் கலாநிதி" 'சிற்ப சிகாமணி' போன்ற பட்டங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-175)

## யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்ற 500 தமிழக மீட்புப்படை தீவிரவாதிகள்

### இந்தியாவுக்குள் நுழைய முயற்சியாம்

கொழும்பு, மார்ச் 18
யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளிடம் இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்ட ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக மீட்புப் படைத் தீவிரவாதிகள் இவ் வார இறுதியில் இந்தியாவுக்குள் நுழையத் திட்டமிட்டுள்ளனர்—

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இவ்வாறு கூறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சென்னை மத்திய சிறையிலிருந்து தப்பிய விடுதலைப் புலிப் போராளிகளில் இருவர் இந்த தமிழக மீட்புப்படை கிளர்ச்சியாளர்களை வரவேற்கத் திட்டமிட்டிருந்தனர்.

இதே வேளை—
தப்பியோடியதாக கூறப்படும் விடுதலைப்புலிகள் உண்மையில் சிறையிலிருந்து நடந்து செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் அறிவுறுத்தலின் பேரிலேயே சண்முகவேல் என்ற கைதி வெளியேற அனுமதிக்கப்பட்டார் என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி மேலும் தெரிவித்தார். (ஐ-14)

அரசமைப்பு சீர்திருத்தம்:

## அரசின் யோசனையை ஆராய்ந்தபின் ஐ.தே.க. திட்டத்தை முன்வைக்கும்

கொழும்பு, மார்ச் 18
தேர்தல் சீர்திருத்தம் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் குறித்து அரசாங்கத்தின் யோசனைகள் வெளியான பின்னரே ஐக்கிய தேசியக் கட்சி தனது யோசனைகளை சமர்ப்பிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இம்மாதம் 21 ஆம் திகதி அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழு கூடும் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தூதுக்குழு ஒன்று அதிகாரப் பரவலாக்கல் குறித்து சாட்சியமளிக்கும்.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் முன்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

அதிகாரப்பரவலாக்கல் பற்றிய அரசின் யோசனைகளை ஆராய்ந்த பின்னரே ஐ.தே.க தமது பங்களிப்பைச் செய்யும் என்றும் அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னால் சாட்சியமளிக்கவுள்ள ஐ.தே.க தூதுக் குழுவில் அக்கட்சியின் எம்.பிக்கள் எவரும் இடம்பெற மாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் சட்டத்தரணிகள் குழு ஒன்றே தெரிவுக் குழுமுன் தெரிபட்டு சாட்சியமளிக்கும் என்று கட்சித் தலைவர் [illegible] விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஐ-எ)

## சமாதானப் பேச்சைக் குழப்பும் பலமான அணி ஸ்ரீலங்கா படையில்

### 'ராவய' ஆசிரியர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 18
சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பக் கூடிய பலமான அணியினர் ஸ்ரீலங்கா இராணுவத்தில் உள்ளார்கள் என 'ராவய' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கு எதிரான இராணுவத்தினரை உடனடியாகவோ குறுகிய காலத்திலோ மாற்ற முடியாது. நிலைமை இப்பொழுது மிகத் தலைகீழாகியுள்ளது. ஸ்ரீலங்கா இராணுவம் ஜனாதிபதி சந்திரிகாவை வெற்றி கொண்டு விட்டது. இது ஒரு சிக்கலான நிலைமையாகும்.

அரசியல் நகர்வுகள் முழுவதும் தவிர்க்க முடியாதபடி மந்த நிலையை அடைந்துள்ளன. தமிழ் சமுதாயம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தாங்க முடியாத அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனை நிறைவேற்றும் என எதிர்பார்க்கிறீர்களா எனக் கேட்டபோது, அவ்வாறு [illegible] சமாதானம் தோன்ற [illegible] இல்லை என அவர் தெரிவித்தார்

[illegible] பதிலளித்த அவர் கொழும்பில் இருந்து கொண்டு சமாதானத்தைப் பற்றிக் கதைப்பவர்களுக்கு தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள் சரியாக விளங்கவில்லை. வாதப்பிரதிவாதங்களுக்கு அப்பாற்பட்ட வகையில் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டுள்ளது என்றார்.

கொழும்பில் இருப்பவர்களுக்கு இங்குள்ள மக்களின் இன்னல்கள், அவலங்கள் தெரியாது. இங்கு வந்த பின் தான் உண்மையில் அவர்களின் அவலங்களை நேரில் காண முடிந்தது.

இந்த மண்ணுடன் மக்கள் பின்னிப் பிணைந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க பலமான அமைப்பு உருவாகியுள்ளது

இந்த மக்களின் அவலங்களுக்கு முடிவு வர வேண்டியது அவசியம். அவலங்கள் நீங்க சமாதான சகவாழ்வு ஏற்பட சகலரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

தெற்கு மக்கள் சமாதானத்துக்குத் தயாராக இருக்கிறார்கள் ஆனால் படையினரில் ஒரு பகுதியினர் அதுவும் மேல்மட்டத்தினர் எதிராக இருக்கிறார்கள். தமது சுகபோக வாழ்க்கைக்காகவே அவர்கள் அப்படிச் செயற்படுகிறார்கள்.

தற்போது நடக்கும் சமாதானப் பேச்சுக்களில் முரண்பாடுகள் இருக்கின்றன; தடைகள் இருக்கின்றன; அவையெல்லாம் பேசி தீர்க்கப்பட வேண்டும். நிரந்தர சமாதானத்தைக் காண சகல இனமக்களும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-4-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பிறாமா, சில்க்கி, பன்ரம் கோழிகளும், முட்டைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிவானந்தன் பழைய தபாற்கந்தோர் வீதி (சிவப்பிரகாச வித்தியாசாலை முன் வீதி), சங்கானை.
(8387)

### விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு – 2 தமிழ்மொழி ஆண்டு 1 – 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G. C. E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8 9 10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.
[8373]

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9. 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6.7, 8, 9.10, 11 வெளியீடு. கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம்.
[8374]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Hyline White வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர்.
[35741]

### கோழிக்குஞ்சு விற்பனை

நல்லினக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. லோமன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மருதம் கோழிப்பண்ணை, பலாலி வீதி, திருநெல்வேலி.
[சி-774]

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர் பலகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர்.
[35743]

### தாராக்குஞ்சு விற்பனைக்கு

அழகிய பொன்நிற தாராக் குஞ்சுகள் (வெலுவை), சில்க்கி குஞ்சுகள் சனி, ஞாயிறுகளில் விற்பனைக்குண்டு N. ரமேஷ், மே/பா K நித்தியானந்தன் [வட்டுக்கோட்டை வீதி], சித்தன்கேணி (சுப்பர் சொனிக் அடுத்த இடம்)
[35749]

### வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி
[சி-396]

### தேவை

நிரந்தரமாய் தங்கி இருந்து கோழிகள், ஆடுகள் பராமரிப்பதற்கு ஓர் ஆள் தேவை. குடும்பமாய் தங்கியிருக்க வசதி உண்டு. நல்ல சம்பளம் வழங்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர்.
[35742]

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (1995) புதிய பரீட்சைத் திட்டத்திற்கமைய பொதுஅறிவு, பொதுஉளச்சார்பு. ஆங்கிலம் ஆகியவை 19-3 95 ஞாயிறு நடைபெறும் வினாத்தாள் தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[35739]

### மகரம் திருமண சேவை

பலதரப்பட்ட ஆண், பெண் திருமண சாதகங்கள் உண்டு. தேவைக்கு முழு சாதகத்துடன் நேரில் சந்திக்கவும். திங்கட்கிழமைகளில் A. C. S (மருதம் அருகில்) 90, காங்கேசன் வீதி, சுன்னாகம். புதன்கிழமைகளில் லெட்சுமி நகை மாடம், 312, காங்கேசன் வீதி, யாழ்நகர்.
(35718)

### புலமைப்பரிசில்

மேற்படி பரீட்சைக்கான பொது அறிவு, மொழித்திறன் வெளிவந்து விட்டது. 60/– மட்டுமே. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி–619)

## நினைவில் நீங்காத நெஞ்சுருகும் 1-ம் ஆண்டு அஞ்சலிகள்

நெஞ்சினிக்க மண்ணில்:
08 – 12 1932



நினைவிழந்து விண்ணில்:
28 – 03 – 1994

## திருமதி பரமேஸ்வரி கனகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை)

திதி: 18 – 03 – 1995

பண்ணாய்ப் பழச்சுவையாய் பார்போற்று முத்தமியாய்
கண்ணா ரமுதமுமாய்க் கற்கண்டாய் - மண்மீதில்
அறமீந்த தாயேயெம் அறிவூற்றே அகல்விளக்கே
மறக்காது மனந்துதிப்போம் நாம்!

★ ★ ★

காலம் யாவும் உங்கள் வண்ணம்
கண்ணில் நின்று கதை பேசும்
ஞாலம் பாடும் கோலத் தாயே
நாட்டில் உங்கள் பேர்வாழும்!

''ஓம் சாந்தி!''

கணவர், பிள்ளைகள்,
சகோதரர் பெறாமக்கள்,
மைத்துனர்கள்.

உப்புக்கேணி வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.
(35738)

### மணமகன் தேவை

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் லிகிதராகக் கடமையாற்றும், உத்தராடம் 1ஆம் பாதம், 8இல் செவ்வாய் உள்ளவருக்கு 33 வயதிற்கு மேற்பட்ட சைவசமய மணமகன் தேவை. அரசாங்கத்திலோ, தனியார் துறையிலோ யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர் விரும்பத்தக்கது. இல. 768, மே/பா, உதயன், யாழ்ப்பாணம் (35674)

## சைக்கிள்களுக்கு இலக்கத் தகடு

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் வைத்து யாழ். மாநகராட்சி மன்றம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளை விநியோகிக்க உள்ளது.
[ஒ-17]

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்
## நினைவுப் பேருரை

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரையை 1995–05–08 ஆம் திகதி நடத்த உத்தேசித்துள்ளோம்.

இந்த நினைவுப் பேருரையை வழங்க ஆர்வமுடையவர்கள் தங்களது சுய விவரங்களையும், பேருரையை வழங்க இருக்கும் மொழியையும் குறிப்பிட்டு 1995-03-29ஆம் திகதிக்கு முன் எம்முடன் கடிதம் மூலம்/நேரடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

நன்றி.
-பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திகதி: 1995-03-14
[சி/761]

உ
சிவமயம்
## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பங்குனித் திங்கள் 5ஆம் நாள் (19 – 03 –95) நாளை ஞாயிற்றுக்கிழமை

திருநிறை செல்வன் **மணிவண்ணன்** அவர்களுக்கும்
திருநிறை செல்வி **அனுஷியா** அவர்களுக்கும்

நோர்வேயில் திருமணம் நடைபெற உள்ளதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★
(இரு வீட்டார் அழைப்பு)

திரு. திருமதி தெய்வேந்திரராசா, (மணமகனின் பெற்றோர்) அரசடி வீதி. திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

திரு. திருமதி மகாலிங்கம், (மணமகளின் பெற்றோர்) அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

[35746]

## யாழ் றோட்டறிக் கழகம்

### அங்கவீனர்களுக்கான இலவச முச்சக்கர வண்டி வழங்கல்

எமது கழகம், மேலும் ஒரு தொகுதி முச்சக்கர வண்டிகளைத் தகுதி வாய்ந்த அங்கவீனமான இருபாலாருக்கும் வழங்கவுள்ளது. மேற்படி வண்டியைப் பெற்று அதன் மூலம் தமது வாழ்வை மேம்படுத்த விரும்பும் அங்கவீனர்கள், கீழ்க்கண்ட முகவரியில் அதற்குரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, உரியவாறு பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

விண்ணப்பமுடிவு திகதி;–
1995 மார்ச் 20

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/777]

## ★ மணமங்கல வாழ்த்து ★

திரு திருமதி மயில்வாகனம் (செம்மணி வீதி, நல்லூர்) அவர்களின் சிரேஷ்ட புத்திரன் செல்வன் **சிவரூபன் (ரூபன்)** அவர்களுக்கும்

திரு. திருமதி சண்முகலிங்கம் (வேலணை மேற்கு) அவர்களின் சிரேஷ்ட புத்திரி செல்வி **சற்குணவதி (சற்குணா)** அவர்களுக்கும்

திருமணம் நாளை (19 – 03 – 1995) ஞாயிற்றுக்கிழமை சுவிஸிலுள்ள அம்பசிடர் ஹோட்டலில் நடைபெறுகின்றது.
மணமக்களை பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவோர்;

திருமதி சண்முகலிங்கம்
கந்தவசிகரி (புஷ்பம்)
பிள்ளைகள்.

[சி–783)

உ
சிவமயம்
## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பவ வருடம் பங்குனி மாதம் 5ஆம் நாள் (19-03-1995) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10–24 மணிமுதல் 11–48வரையுள்ள திருதியை திதியும் சித்திரை நஷ்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ஜெகநாதன்** (ஜெகன் போட்டோ, யாழ்.) அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **லலிதாம்பிகை** அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதித்து மணவிழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மணமகனில்லத்தில் (20 - 03 - 95) திங்கட்கிழமை மாலை 4-30மணியளவில் வரவேற்புபசார வைபவம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திரு. திருமதி சுப்பிரமணியமும், குடும்பத்தினரும். 30/17, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்.

திருமதி த. சோமசுந்தரமும், குடும்பத்தினரும். தபாற்கந்தோர் ஒழுங்கை, (ஸ்ரீராம் தொழிற்சாலை அருகில்) கோப்பாய் தெற்கு, கோப்பாய்

(35700) ★ இருவீட்டார் அழைப்பு ★

## ஓய்வூதியக் கொடுப்பனவு தாமதமின்றி கிடைக்கும்

### ஆண்டு விழாவில் உரை

வலிகாமம் தெற்கு, மார்ச் 18

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்ப்பாணச் செயலக ஓய்வூதிய திணைக்களக் கணக்காளர் திரு. கா. வீரசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராக அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் திரு ந. குருசாமி தலைமையில் விழா நடைபெற்றது.

ஓய்வூதியர்களுக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்ட 260 ரூபா வாழ்க்கைப்படியை 1993ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்து ஓய்வூதியர்களுக்கு கொடுப்பது பற்றிய சுற்றுநிருபம் எதுவும் அமைச்சில் இருந்து தமக்கு கிடைக்கவில்லை எனவும் —

கொழும்பில் இருந்து சுற்றுநிருபம் கிடைத்தால் ஓய்வூதிய வாழ்க்கைப்படியை உடன் வழங்க தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் —

தற்போது கொழும்பில் இருந்து ஓய்வூதிய வவுச்சர்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்படுவதனாலேயே ஓய்வூதிய கொடுப்பனவில் கால தாமதம் ஏற்படுவதாகவும் — வீரசிங்கம் தெரிவித்தார்.

வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளன தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஓய்வூதிய கொடுப்பனவுகளில் உள்ள முரண்பாடுகள் சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஓய்வூதிய திணைக்கள அத்தியட்சகர், ஓய்வூதிய முரண்பாட்டுச் சபையினர் ஆகியோருடன் சம்மேளனம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறினார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். விக்கினராசா, வலி – தெற்கு பிரதேச சேமநல சங்க தலைவர் திரு. வி. இராசையா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

(இ–152)

## புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

கல்லூரியின் மேம்பாட்டு நிதி உதவிக்காக
நடத்திய
அதிர்ஷ்ட லாபச்
### சீட்டிழுப்பு
17–03–1995

பரிசு பெறும் இலக்கங்கள்:

1ஆவது பரிசு — 09935
2ஆவது பரிசு — 01590
3ஆவது பரிசு — 07043

ஆறுதல் பரிசுகள் (10)

| | | | |
|---|---|---|---|
| 05850 | 01887 | 00133 | 01640 |
| 08185 | 04705 | 05001 | 01885 |
| 10378 | 07047 | | |

ஆதரவளித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்

– பழைய மாணவர் சங்கம்.
(சி–785)

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995ஆம் ஆண்டிற்கான
## மகரயாழ் விருது பெறும்



### து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு

எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்கள்

மு. பத்மநாதன் குடும்பத்தினர்.
[செந்தாமரை குளிர்த்தடாக பங்காளர்]

''செந்தாமரை''
22/3A, விதானையார் வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(சி/626)

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995ஆம் ஆண்டிற்கான
மகர யாழ். விருது பெறும்
வைத்திய கலாநிதி
### து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு

எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

வை. எம். சி. ஏ. ஆளுநர் சபை
உறுப்பினர்கள், ஊழியர்கள்,
அங்கத்தவர்கள்,
யாழ். வைஸ்மன் கழக அங்கத்தவர்கள்.
[சி/784]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## கைதிகள் விடுதலை

சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த போர்க் கைதிகள் இருவரை தமிழீழ தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் நேற்று முன்தினம் விடுதலை செய்தார். தலைவரின் மனிதாபிமானத்தால் அவர்கள் இருவரும் உயிர் தப்பினர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஈவிரக்கம் இல்லாத அமைப்பு என்றும், அதன் தலைவர் பிரபாகரன் மனிதாபிமானம் இல்லாதவர் என்றும் எழுதும் கொழும்புப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் வந்திருக்கும் வேளையில், அவர்களது எழுத்துக்கள் விசமத்தனமானவை என்று எடுத்துக் காட்டும் விதத்தில் உண்ணாவிரதக் கைதிகளின் விடுதலை நிகழ்வு நடந்திருக்கிறது!

தென்னிலங்கைப் பத்திரிகையாளர் எம்மாத்திரம்? விடுதலைப் புலிகளுடன் பேசுவதன் மூலம் மட்டுமே இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண முடியும் என்று உணர்ந்து அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவே, லண்டனில் பி.பி.ஸி ஆங்கில சேவைக்கு இம்மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்கிய செவ்வியில் "விடுதலைப் புலிகள் இரக்கமில்லாத ஒரு கெரில்லா இயக்கம் தானே" என்று வர்ணித்தார்.

ஆனால் இப்போது, இரக்கம், மனித கருணை, மனிதாபிமானம் இல்லாதவர்கள் விடுதலைப் புலிகளும் அவர்களின் தலைவருமா அல்லது ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அரசாங்கத்தின் அரசியல்வாதிகளுமா என்பது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கும்!

தங்கள் மண்ணுக்காகப் போராடி, போர்க் கைதிகளாகி, தமது உறவுகளைப் பிரிந்து வாழும் பொலீஸாரும் இராணுவத்தினரும், தம்மை விடுவிக்குமாறு கோரி கடந்த பதினேழு நாள்களாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களின் உடல்நிலை மோசமடைந்து வருகிறது. எந்த நேரத்திலும் அவர்களின் உயிர் பிரியலாம் என்ற ஆபத்தான நிலை.

தங்கள் பிள்ளைகளை விடுவிக்க உதவுமாறு உண்ணாவிரதிகளின் பெற்றோர்கள் கெஞ்சி மன்றாடியும் கூட, அரசாங்கம் அதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை!

அதே சிங்கள மக்களின் வாக்குகளுக்குக் கெஞ்சி மன்றாடி பதவிக்கு வந்த சந்திரிகா வெளிநாட்டுப் பயணத்தில் பொழுது போக்குகிறார்! அமைச்சர் பிரதானிகளும் அடுத்தவர்களும் "நமக்கேன் வீண் சோலி" என்று சொல்லாலும் செயலாலும் மௌனம் சாதிக்கிறார்கள்!

மண்ணுக்காகப் போராடியவர்களுக்கு அளிக்க வேண்டிய மரியாதை, அவர்கள் மீது காட்டும் இரக்கம் மனிதாபிமானம்— எதனையும் அரசுத் தலைவர்களிடம் காணமுடியவில்லை! தனது பிரசைகளின் உயிரைக்காப்பாற்ற வேண்டும் என்ற மனிதநேயம் தானும் மருந்துக்கும் இல்லை அவர்களிடம்!

மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் கூட தமது அரசியல் நலனுக்கே முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்கிறார்கள்!

வியாழக்கிழமை விடுவிக்கப்பட்ட சிசிர சாந்தலால், சுனில் திஸாநாயக்கா ஆகிய இருவரின் உடல் நிலை மோசமாக இருந்தது. கொழும்பிலிருந்து நல்லெண்ணத் தூதுக்குழுவில் வந்தவர்கள் அவர்களைப் பார்த்து பரிதாபப்பட்டு உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு கேட்டும் அவர்கள் மறுத்தனர்.

அந்த இருவரினதும் உயிர்கள் பிரிந்து விடக் கூடாதே என்ற மனித நேயத்துடன், மனிதாபிமானத்துடன் அவர்களை தலைவர் பிரபாகரன் விடுதலை செய்தார்.

ஆனால் தலைவரின் மனிதாபிமானத்தை தமக்கு சாதகமாகக் கொண்டு உண்ணாவிரதிகள் விடயத்தில் அரசு நகராதிருக்குமானால், பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வரும் என்பதனை அது புரிந்து கொள்ள வேண்டும்.

---

கொலைகள், காணாமற்போனோர் குறித்து விசாரணை:

# சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு தருமாறு அரசிடம் கோரிக்கை

### சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை

கொழும்பு, மார்ச் 18

இலங்கையில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றி விசாரிக்கும் ஆணைக்குழுவின் முன் தோன்றி சாட்சியம் அளிப்பவர்களுக்கு போதுமான பாதுகாப்பை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இதுகுறித்து அவர்கள் விடுத்த அறிக்கையில், ஏற்கனவே பல்வேறு மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பாக தற்போது முடுக்கி விடப்பட்டிருக்கும் விசாரணைகளில் அவர்கள் தலையிட அனுமதிக்கக் கூடாது.

சாட்சிகள் பயமுறுத்தப்படுதலோ, அச்சுறுத்தல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுதலோ இடம்பெற அனுமதிக்கக் கூடாது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது [ஒ-7]

## கண் சத்திர சிகிச்சை

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழக ஆதரவில் கண்ணில் பூப்படலம் [*ற்றறக்] அகற்றும் சத்திர சிகிச்சை நாளை ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நடைபெறும்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆரம்ப வைத்திய பரிசோதனைகளில் மேற்படி சிகிச்சைக்கென தெரிவு செய்யப்பட்டோர் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வைத்தியசாலையில் சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர் (ஐ-14)

## இரவில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 18

உரும்பிராய் பகுதியில் வாழைத்தோட்டங்களில் இருந்து இரவு நேரத்தில் வாழைக்குலைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்திருப்பது குறித்து விவசாயிகள் பலர் புகார் தெரிவித்துள்ளனர்.

[ஐ-17]

ஜெயலலிதா கன்னி மரியாளா?

# கிறிஸ்தவ மக்களின் எதிர்ப்பு மேலும் தீவிரம்

கன்னி மரியாளாக ஜெயலலிதாவைச் சித்திரித்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டமையை கண்டித்து கிறிஸ்தவர்கள் நடத்தி வந்த போராட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் பிறந்த நாளை யொட்டி அ.தி.மு.கவினரால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் ஜெயலலிதாவை அன்னை பராசக்தியாகவும் கன்னி மரியாளாகவும் சித்திரிக்கப் பட்டிருந்தது.

கன்னி மரியாளாக ஜெயலலிதாவைச் சித்திரித்தது கிறிஸ்தவர்கள் மத்தியில் புயலை ஏற்படுத்தியது. ஜெயலலிதா மன்னிப்புக் கோரவேண்டும் என்று அவர்கள் கோரினர்.

ஆனால் இது தொடர்பான அறிக்கை எதனையும் ஆளுங்கட்சி வெளியிடவில்லை. கிறிஸ்தவ பாதிரிமார் கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர்.

இதன் பின்னரே அ.தி.மு.கவினர் தன்மீதுள்ள பாசம் காரணமாக அவ்வாறு செய்து விட்டதாகவும் அவற்றை அகற்றும் படியும் ஜெயலலிதா கேட்டிருந்தார்.

கடவுளின் தாயான கன்னி மரியாளுக்கு ஜெலலிதாவை ஒப்பிட்டமையால் ஆத்திரமுற்ற கிறிஸ்தவர்கள் "ஜெயலலிதா தன்னை இவ்வாறு சித்திரித்தது தவறு என்பதை ஒத்துக் கொள்ளவில்லை" என்பதால் மேலும் ஆத்திரமடைந்தனர்; ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். பஸ் தீவைப்பு, கடைகள் அடித்து நொருக்குதல் என்பன இடம்பெற்றன.

பரவலாக நடைபெற்று வரும் இப் போராட்டம் ஜெயலலிதா மன்னிப்பு கோரும் வரை தொடரும் என மதுரைப் பேராயர் அதிவண. ஆரோக்கியசாமி தெரிவித்துள்ளார்.

தடையை மீறி நேற்று சென்னை உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்ட 800 பேர் கைது செய்யப்பட்டனர்.

(ஓ-14)

இம்முறை விவசாயிகளுக்கு

## நல்ல விளைச்சல் தந்த பி. ஜீ.- 300ரகவிதை நெல்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

கொழும்பில் இருந்து கப்பலில் தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பி. ஜீ–300 இன வெள்ளை அரிசி விதை நெல் நல்ல விளைச்சலை ஈட்டிக் கொடுத்திருப்பதாக யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் தெரிவித்துள்ளது.

அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளில் இந்த ரக விதை நெல் கூடுதலாக பயிரிடப்பட்டது

இந்த விதை நெல்லை யாழ் மாவட்ட விவசாய உற்பத்திக்கூட்டுறவுச் சமாசம் கொழும்பில் இருந்து தருவித்து விவசாயிகளுக்கு வழங்கி இருந்தது. (ஓ-17)

## தப்பியோடிய புலிகளை பிடிக்க தீவிர நடவடிக்கை

### சபையில் ஜெயலலிதா தெரிவிப்பு

சென்னை மார்ச் 18

சென்னை மத்திய சிறையில் இருந்து தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளைப்பிடிக்க தீவிர நடவடிக்கைகளை காவல்துறை எடுத்து வருகிறது என்று நேற்று தமிழக சட்டப் பேரவையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

தடா கைதிகள் சென்னை மத்திய சிறையில் இருந்து தப்பிச் சென்றது பற்றிய விளக்க அறிக்கையை முதலமைச்சர் அவையில் படித்தார். தப்பிச் சென்ற விடுதலைப் புலிகளில் 2பேர் இறந்து விட்டனர்; 2பேர் கைது செய்யப்பட்டனர்

சென்னை மத்திய சிறையில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கைதிகள் தப்பிச் செல்ல உடந்தையாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் கடமையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (ஐ-4)

## விஜய கொலை விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 18

விஜயகுமாரதுங்காவின் படுகொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை நேற்று ஆரம்பித்தது.

இந்த மூன்று பேர் ஆணைக்குழுவின் தலைவராக உயர் நீதிமன்ற நீதியரசர் பி·இராமநாதன் பணி புரிகின்றார்.

இக்கொலை தொடர்பாக ஏதாவது தகவல்கள் இருப்பின் அவற்றை தெரிவிக்கும்படி பொதுமக்களை ஆணைக்குழு கேட்டுள்ளது.

(ஐ-எ)

யாழ். பல்கலைக் கழகத்தில்:

## மருத்துவக் கண்காட்சி; 27 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ் விஞ்ஞான சங்கம் மருத்துவ பீடத்துடன் இணைந்து நடத்தும் பொது மக்களுக்கான மருந்துவக் கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடைபெறும்.

பொதுமக்களுக்கு பரவலாக காணப்படும் நோய்களும் அவற்றை இனங்கண்டு தடுத்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட உறுப்புக்கள் வைத்து நேரடியாக விளக்கமளிக்கபடுமென இக் கண்காட்சியை ஏற்பாடு செய்து வரும் யாழ் விஞ்ஞான சங்கத்தினர் தெரிவித்தனர்.

எட்டு பகுதிகளாக கண்காட்சி பிரிக்கப்பட்டு நடைபெறவுள்ளது. இக் கண்காட்சியைப் பார்வையிடுவதற்காக 10ரூபா கட்டணம் அறவிடப்படும் என்றும் காலை 8மணி முதல் மாலை 3மணி வரையுமே நுழைவுச் சீட்டுக்கள் விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை ஊடாக கண்காட்சியைப் பார்வையிடுவதாயின் முன் கூட்டியே பதிவு செய்து இதற்கான நுழைவுச் சீட்டுகளைப் பெற்று சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாமெனவும் —

3½ தொடக்கம் 4மணித்தியாலங்கள் வரை இக் கண்காட்சியை முற்று முழுதாக பார்வையிடுவதற்கு தேவைப்படுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(ஓ-4)

## அடுத்த மாத ஓய்வூதியம் 1,560 ரூபா நிலுவையுடன்!

கொழும்பு, மார்ச் 18

ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் அடுத்தமாதம் தமது ஓய்வூதியக் கொடுப்பனவுடன் ஆயிரத்து ஐந்நூற்றி அறுபது ரூபாவை கூடுதலாகப் பெறுவர்

மாதாந்த வாழ்க்கைசெலவுப் படியான 280ரூபா வீதம் ஆறுமாத பாக்கிப் பணமே இவ்வாறு வழங்கப்பட உள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் ரஞ்சிதசெனிவரத்ன கூறினார்.

அரச ஓய்வூதியம் பெறும் இரண்டுலட்சம் பேருக்கு இப் பாக்கிப்பணம் வழங்கப்படுகிறது.

தவணை முறையில் வழங்கப்படும் இராண்டாவது பாக்கிப்பணம் இதுவாகும்.

[ஓ-7]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

கராத்தே பயிற்றுநர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு முற்பகல் 9 30 மணிக்கு சோண்டாவில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கராத்தே பயிற்றுநர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது. (ஐ)

## தலைநகர் கொழும்பில் மீண்டும் கைதாகும் தமிழர்!

கொழும்பில் விடுதிகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் பொலீஸாரால் மீண்டும் கைதாகி வருகின்றனர்.

பொலீஸில் பதிவு செய்யவில்லை எனக் காரணங் காட்டி தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதாக தமிழ் எம். பி ஒருவர் பொலீஸ் மா அதிபருக்கு தெரியப் படுத்தியுள்ளதாக கொழும்புத் தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிற இடங்களிலிருந்து கொழும்பு வருவோர் முன்னர் போல் தமது பெயர்களை பதிவுசெய்யும் நடைமுறை இப்பொழுதும் அமுலில் உள்ளதா? அப்படியானால் அதுபற்றி மக்களுக்கு அறியத்தருமாறும் அந்த எம். பி பொலீஸ்மா அதிபரை வலியுறுத்தியுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஓ-7]

## தவறணைக் கள்ளில் அரைவாசி நுரையாம்!

யாழ்ப்பாணம், மார்ச் 18

பனங்கள்ளுக்கு பெயர் போனது யாழ் மாவட்டம். தாராளமாகக் கிடைக்கும் இக்கள்ளை விற்பதிலும் கூட மோசடிகள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலான தவறணைகளில் கள்ளை நன்றாக அடித்து நுரையெழுப்பிய பின்னர் போத்தலில் விடுவதனால் போத்தலின் அரைவாசியை நுரையே ஆக்கிரமித்துக் கொள்ளவதாகவும்—

இது பற்றி தவறணைக்காரரிடம் முறையிட்டபோது தமக்கு ஏச்சும் பேச்சும் கிடைப்பதாகவும் "குடிமகன்" கள் குறைபட்டுக் கொள்கின்றார்கள்!

இதேவேளை அரைப் போத்தல் கள்ளின் விலை ரூ 9.50 ஆகும். பலர் 10 ரூபாவை கொடுக்கும் போது மாற்றிய காசு இல்லை என்று மிகுதி 50 சதம் வழங்கப்படுவதில்லை என்பதும் அவர்களின் மற்றொரு முறைப்பாடு. [ஓ-11]

# புலிகளின் உணர்வலைகள்தெளிவானவை; அரசியல் பந்து தற்போது அரசின் பக்கம்

## 'மேர்ஜ்' தலைவர் சாள்ஸ் அபேசேகரா

'யுக்திய" சிங்கள வார இதழின் கடந்த 12ஆம் திகதி பதிப்பில் "மேர்ஜ்" இயக்கத்தின் தலைவர் திரு சாள்ஸ் அபேசேகரா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகுகிறது.

திரு. சாள்ஸ் அபேசேகரா அங்கிலிக்கன் திருச்சபை ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவுடன் கடந்த புதனன்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

சமாதான முயற்சிகள் தற்போது ஓர் முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளன

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெறவுள்ள நான்காம் கட்டப்பேச்சு வார்த்தைக்கு இன்னும் திகதி நிர்ணயிக்கப் படவில்லை. பேச்சவார்த்தையில் இடம் பெறவுள்ள விடயங்கள் குறித்து இருதரப்பாருக்கும் தெளிவான உடன்பாடு ஏற்படவில்லை என்ற நிலை கடந்த வாரம் இருந்த போதிலும், சமாதான முயற்சிகள் மந்தகெதியில் நடைபெறுவதாகத் தோன்றினும் உண்மையில் இன்று நிலைமை அவ்வாறில்லை. சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகக் கூடிய சாத்தியங்கள் தற்போது உள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (05-03-95) விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையிலும் திங்கட்கிழமை (06-03-95) அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையிலும் காணப்பட்ட அவநம்பிக்கைகள் தற்போது பெருமளவில் அற்றுப் போயுள்ளன என்பதே எனது எண்ணமாகும்.

யாழ்ப்பாண மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வினைக் கண்டு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு அதன் பின்னர் அரசியல் தீர்வு குறித்து ஆராயலாம் என விடுதலைப் புலிகள் இது வரை கூறிவந்தனர். அதாவது ஒவ்வொரு விடயமாகத் தீர்வினைக் காணவேண்டும் என்பதேயாகும். ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையின்படி கால அட்டவணையில்மாற்றமேற்பட்டுள்ளது இந்த அறிக்கை குறித்து நாம் ஆராய வேண்டும். விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

1. மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பான நடவடிக்கைகள் உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டும். இருப்பினும் இந் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் ஒருதலைப் பட்சமாக மேற்கொள்ளப்படக்கூடாது. இந்த நடவடிக்கைகள் அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினால் தீர்மானிக்கப்படும் ... களுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும் ... றான குழுவை உருவாக்கும் வரை யாழ்ப்பாணத்திற்கு ஜெனரேட்டர் போன்ற உபகரணங்களை அனுப்புவதில் பயனேதும் இல்லை. இவ்வாறு அவற்றை அனுப்புவதில் அரசின் ஒருதலைப்பட்சமான அபிலாஷை மட்டுமே பிரதிபலிக்கிறது இது யாழ்ப்பாண மக்களின் விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலிக்க மாட்டா.

2. மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பான இரண்டு விடயங்கள் இன்னும் அரசால் நிறைவேற்றப்படவில்லை. மீன்பிடிப்பது தொடர்பான தடை, வடபகுதிக்கு அனுப்பப்படும் ஒரு சில பொருள்கள் மீதான தடை, வடபகுதிக்கு பொருள்களை அனுப்பும் போது இராணுவத் தலையீட்டினால் ஏற்படும் தாமதம் ஆகியன தொடர்பான வரையறை ... பட வேண்டும்.

3. ... நடவடிக்கைகளை மேற் கொள்ளப்பட்டு வரும் வேளையில் அரசு அரசியற் தீர்வை முன் வைக்கலாம். அது தொடர்பாக தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்க விடுதலைப் புலிகள் தயாராயுள்ளனர் அவ்வாறான தீர்வு தமிழ் மக்களின் தனித்துவம் தன்னாட்சி உரிமை ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். இணைப்பு முறையின் மூலம் இந்த உரிமைகள் பிரத்தியட்சமாக்கப்பட வேண்டும்.

> அதிகாரப் பகிர்வு ஒரு ஜனநாயகச் செயற்பாடாகும்; ஜனநாயக நோக்கில் நாடு முழுவதற்கும் இது தேவையான ஒன்றாகும். இருப்பினும், தனித்துவமும் தன்னாட்சி உரிமையும் தமிழ் மக்களுக்கும் சிறப்பாகத் தேவையானவை. இந் நிலையில் எங்களுக்கு கிடைக்கும் ஜனநாயக முறையிலான அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களுக்கும் கிடைக்கக் கூடாதா?

இந்த நிலைப்பாடு மிகவும் தெளிவானதாகும். இன்றுள்ள யதார்த்த நிலைகளின் படி இந்த நிலைப்பாட்டை நியாயமானதென்றே கருதுகிறேன்.

அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிப்பதில் கடந்தமாதம் அரசு விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம்கொடுத்தது இது தொடர்பான புலிகளின் உணர்வலைகள் தெளிவானவை. பேச்சுவார்த்தைகள் தேவையற்றவை. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பான எமது நிலைப்பாடு என்னவென்பது நன்கு தெரியும் தனி நாட்டுக்கான மாற்றீடு. அதிகாரத்தைப் பகிர்வதே என்பதை அரசு அறியும். எனவே அரசே தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்பதை விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும் இருப்பினும் அதில் ஒரு நிபந்தனை அடங்கி உள்ளது. அதாவது தீர்வானது தமிழ் மக்களின் தனித்துவத்தையும் தன்னாட்சியுரிமையையும் ஏற்றுக் கொண்ட தீர்வாக அமைதல் வேண்டும். இவ்வாறான தீர்வை இப்போது வேண்டுமானாலும் முன் வைக்கலாம். அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தை இந்த அடிப்படையிலேயே அமைய வேண்டும்.

அரசியல் பந்து தற்போது அரசாங்கத்தின் பக்கமுள்ளது அரசு இப்போது அரசியல் தீர்வொன்றினைத் தயாரிக்க வேண்டும். புலிகளால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை எவ்வளவு தூரம் ஏற்க முடியும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொண்டதைப் பிரதிபலிக்கும் விதத்தில் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை எவ்வாறு தயாரிக்கலாம் என்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். தீர்மானித்த முடிவை விடுதலைப் புலிகளுக்கும் மக்களுக்கும் முன்வைக்க வேண்டும்.

இது தொடர்பாக புதியதோர் எண்ணத்தை முன் வைக்க விரும்புகிறேன். அதுவும் விடுதலைப் புலிகளின் அறிக்கையைப் போலவே சுருக்கமானதாகும். அதிகாரப்பகிர்வு ஒரு ஜனநாயகச் செயற்பாடாகும். ஜனநாயக நோக்கில் நாடு முழுவதற்கும் இதுதேவையான ஒன்றாகும். இருப்பினும் தனித்துவமும், தன்னாட்சி உரிமையும் தமிழ் மக்களுக்குச் சிறப்பாகத் தேவையானவை. இந் நிலையில் எங்களுக்குக் கிடைக்கும் ஜனநாயக முறையிலான அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களுக்கும் கிடைக்கக் கூடாதா? அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் புதிய கருத்தை இவ் விடத்தில் விவாதத்திற்காக எடுத்துக் கொள்ளுகிறேன். அதாவது அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் சகல அமைப்புக்களுக்கும் அளிக்கப்படும் அதிகாரம் ஒரே வகையில் அமைய வேண்டும்? அல்லது சிற்சில விசேட காரணங்களுக்காக ஓர் அமைப்புக்கு வழங்கப்படும் அதிகாரம் மற்றைய அமைப்புக்கு வழங்கப்படாவிடின் அது நியாயமற்றதாக அமையாதா?

தமிழ் மக்களுக்காக ஒதுக்கப்படும் தன்னாட்சிப் பிரதேசத்திற்கு வழங்கப்படும் அதிகாரங்கள் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் அதிகார வரையறைக்கு அப்பாற் பட்டதாயின் அதை இனத்தின் உரிமை என ஏற்றுக் கொள்வது பொருத்தமானதா? இவை பற்றி நாம் தொடர்ந்தும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட
சிறந்த கழகங்கள் பங்குகொள்ளும்
மாபெரும் காட்சி

## உதைபந்தாட்டப் போட்டி

இடம்:- யாழ். பல்கலைக்கழக மைதானம்
காலம்:- நாளை [19.3.95] ஞாயிற்றுக்கிழமை
முதலாவது போட்டி நேரம் — 3.15 மணி
செண். அன்ரனீஸ் எதிர் யாழ். பல்கலைக்கழகம்
இரண்டாவது போட்டி நேரம் — 4 30 மணி
பாடும்மீன் எதிர் ஞானமுருகன்

பிரவேசம்:- 10 ரூபா மட்டும்

ரசிகர்களின் ஆதரவிற்கு நன்றி

யாழ். பல்கலைக்கழக
உதைபந்தாட்ட அணி

[சி/793]

# விடுவிக்கப்பட்ட கைதிகள்
# இன்று கொழும்பு பயணம்

தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனால் மனிதாபிமான அடிப்படையில் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்ட யுத்தக் கைதிகளான பொலிஸார் இருவரும் இன்று விமான மூலம் கொழும்பு செல்லவுள்ளனர்.

விடுவிக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவ்விரு யுத்தக் கைதிகளும் இன்று காலை பருத்தித்துறைக்கு வரும் 'சீடான்ஸர்' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கூட்டிச் செல்லப்படுவர்.

பின்னர் பலாலியில் இருந்து விமான மூலம் அவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வைத்திய அதிகாரியான பியஸ் என்பவரும் கைதிகளுடன் கொழும்பு செல்வார். (ஐ-3)

## பல்கலைக்கழக அனுமதி:
# பாதிக்கப்பட்ட மாணவர் குழு இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்.18

1994 ஆம் 95 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதிக்குரிய வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மாணவர்களின் சார்பில் எட்டுப் பேர் அடங்கிய குழு ஒன்று இன்று இங்கிருந்து கொழும்பு செல்லவுள்ளது.

ஒவ்வொரு துறையில் இருந்தும் பாதிக்கப்பட்ட இவ்விரு மாணவர்கள் இக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

கல்வி உயர்கல்வி அமைச்சின் அதிகாரிகளையும் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அதிகாரிகளையும் மேற்படி குழுவினர் கொழும்பில் சந்தித்து தமக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து விளக்கமளிப்பர்.

மாணவர்கள் அடங்கிய இக் குழுவில் அதிபர்கள், பெற்றோர்கள் சார்பிலும் சிலர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது (ஐ 7-14)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி இன்று காலை 8.30 மணிமுதல் ஹாட்லி மைதானத்தில் நடைபெறும். [ஐ.20]

## விவரம் பார்க்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

1983 ஜூலை வன்செயல்களால் பாதிக்கப்பட்டு, எந்தவித உதவியோ, நிவாரணமோ பெறதவர்களிடமிருந்து புனர்வாழ்வு புனர் அமைப்பு அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவு திகதி கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இம்மாதம் 24 ஆம் திகதி வரைநீடிக்கப்பட்டுள்ளது இதுபற்றிய செய்தி ஏற்கனவே உதயனில் வெளிவந்தது தெரிந்ததே.

விண்ணப்பங்களை எவ்வாறு அனுப்பவேண்டும் என்பது குறித்த விவரங்களை இல. 15, இரண்டாவது ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். (அ)

## லண்டனில் சந்திரிகா பேச்சு

கொழும்பு, மார்ச். 18

லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேட்டுடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகள் குறித்து பேச்சுக்களில் ஆராயப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

# இராணுவ தலைமையைத்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளுக்கு மேலானதாக இராணுவத்தின் போரியல் நலன்களுக்கு முதன்மை கொடுப்பது சமாதான வழிமுறைக்கு பெரும் பங்கத்தை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டினோம்.

இந்த விடயத்தில் எமது பார்வை சரியானது என்பதையும் இராணுவ நலனுக்கு நீங்கள் மேலுரிமை கொடுக்கின்றீர்கள் என்பதையும் உங்களது கடைசிக் கடிதம் நிரூபித்துக் காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைக்கும் கோரிக்கைகளை நிறைவு செய்தால் அது 'பாரதூரமான இராணுவ விளைவுகளை ஏற்படுத்தும்' என நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் நாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளோ மக்களின் அன்றாட — அவசியப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்டவை. பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்கு ஒரு பாதையைத் திறப்பது, அத்தியாவசியப் பொருட்கள் மீதான பொருளாதாரத் தடையை அகற்றுவது, மீன்பிடித் தடையை நீக்குவது போன்ற நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை தேசியப் பாதுகாப்பு பிரச்சினைகளாக நீங்கள் திரித்துக் காட்டி, அவற்றை தீர்த்து வைக்க மறுக்கின்றீர்கள். இன்னொரு வகையில் சொல்லப் போனால் எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வு மீது இராணுவம் திணித்துள்ள நெருக்குவாரங்களை நீங்கள் நியாயப்படுத்த முனைவதோடு 'தேசிய பாதுகாப்பை' பேணுவதற்கு இந்த நெருக்குதல்கள் அவசியமானவை என்றும் நீங்கள் கருதுகின்றீர்கள்.

எமது மக்களை மிகவும் ஆழமாகப் பாதித்து நிற்கும் இந்த முக்கியமான விடயத்தில் நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடு எமக்கு ஆழமான கவலையையும், ஏமாற்றத்தையும் தருகின்றது எமது மக்களின் உரிமைகளையும் - சுதந்திரங்களையும் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக நீங்கள் கருதும் இந்தத் தவறான நிலைப்பாட்டில் இராணுவவாதம் மட்டுமன்றி பேரினவாத அம்சங்களும் பொதிந்து கிடக்கின்றன.

எமது மக்களைப் பீடித்து நிற்கும் மிகவும் அவசரமான பிரச்சினைகளை, தீர்த்து வைக்க முடியாத பாதுகாப்புப் பிரச்சினைகளாக நீங்கள் சித்திரித்துக் காட்ட முயலவது ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது, தமிழர் மீது இராணுவ - பொருளாதார நெருக்குதல்களை நீடித்து அந்த அழுத்தங்களை பேச்சுவார்த்தையின் போது பேரம்பேசி அரசியல் இலாபம் பெறும் ஒரு நோக்கத்திற்காக பயன்படுத்த எண்ணுகின்றீர்கள். இதன் காரணமாகவே ஒட்டுமொத்தமான ஓர் அரசியல் தீர்வுத்திட்டத்தின் கீழ் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்துகின்றீர்கள். உங்களது இந்த நிலைப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகள் தேசிய இன முரண்பாட்டில் இருந்து எழுந்த அரசியல் சிக்கல்கள் அல்ல. இவை அனைத்தும் போருபாயத் தந்திரங்களாக இராணுவத்தினால் உருவாக்கப்பட்டவை எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தத் தடைகளும்-கட்டுப்பாடுகளும் இராணுவத்தின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளாகும். நியாயமற்ற - மனிதாபிமானமற்ற இந்த நடவடிக்கைகள் மனிதாபிமானத்தின் அடிப்படையில் தீர்த்து வைக்கப்பட வேண்டும் பிளவு பட்டு நிற்கும் இரு தேசங்கள் மத்தியில் சமாதானத்தையும், நல்லுறவையும் கட்டி எழுப்பும் நோக்கில் இவை தீர்த்து வைக்கப்பட வேண்டியவை.

கடந்த ஆறு மாத காலத்தில் நாம் எழுதிய பல கடிதங்களிலும் சமாதானப் பேச்சுக்களின் போதும் எமது மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கு, அவசரமான தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தி வந்திருக்கின்றோம். நாம் நாளாந்தப் பிரச்சினைகளை வலியுறுத்துவதால் இனப்பிரச்சினைக்கு அடிப்படையான அரசியல் சிக்கல்கள் பற்றி நாம் பேச விரும்பவில்லை என அர்த்தப்படுத்த முடியாது. அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு நாம் எப்பொழுதும் மறுத்ததில்லை. எமது மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு தீர்வுத்திட்டம் சம்பந்தமாகவும் நாம் கருத்துக்களை முன்வைத்திருந்தோம். எனவே பேச்சுவார்த்தைகளில் இன்று ஏற்பட்டுள்ள மந்தநிலைக்கு அரசியல் கலந்துரையாடல்கள் நடைபெறவில்லை என்பது காரணமல்ல. பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும் என எண்ணி, எமது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்த்துவைக்க நீங்கள் தயக்கம் காட்டுவதே பேச்சுக்களில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குக் காரணமாகும்.

உண்மையான விருப்பு இருந்தால், மிகவும் எளிதாகத் தீர்த்து வைக்கக்கூடிய எமது மக்களின் அன்றாட - அவசியப் பிரச்சினைகளில் உங்களது அரசாங்கம் கடுமையான போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமானால், மிகவும் சிக்கலான — மிகவும் கடினமான தேசிய இனப் பிரச்சினையை உங்களால் தீர்த்து வைக்க முடியுமா என்பதில் எமக்கு சந்தேகம் எழுவதில் நியாயம் உண்டு அல்லவா? எனவே நீங்கள் எடுத்துள்ள முடிவை சமாதானம் என்ற உன்னத இலட்சியத்திற்காக மீள்பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும் வேண்டிக்கொள்கின்றோம். 1995 மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னராக உங்களிடமிருந்து ஒரு சாதகமான பதிலை நாம் பெறாத பட்சத்தில், சமாதானப் பேச்சுக்களை தொடர்வதா, இல்லையா என்பது சம்பந்தமான மிகவும் வேதனைக்குரிய ஒரு முடிவை நாம் எடுத்துக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவோம்.

உங்களிடமிருந்து விரைவான பதிலை எதிர்பார்க்கின்றோம்.

இப்படிக்கு
உங்கள் நேர்மையுள்ள
வே. பிரபாகரன்
தலைவர்.
தமிழீழ விடுதலைப் புலிகள்.

### கதிர்காமர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த இவ்விரு இளைஞர்களும் கடந்த 14 ஆம் திகதி அங்கிருந்து கொழும்பு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

சிரேஷ்ட அமைச்சர்கள் மூவரின் இல்லங்களுக்கு அருகில் நோட்டமிட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 6 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சம்மந்தப்பட்ட அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளினால் அவர்கள் ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

பாதுகாப்பு பிரிவு அதிகாரிகளினால் விசாரணை செய்யப்பட்ட பின்னர், ஆறு தமிழ் இளைஞர்களும் மேலதிக விசாரணைக்காக இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி தெரிவித்தார். [ஐ 6]

### மத்தியஸ்தம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

பட்ட அபிவிருத்தி பாதிக்கப்படாத வகையிலும், சமாதானத்திற்கான உணர்வு அற்றுப்போகாத வகையிலும், தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது அவசியமானது.

தற்போதுள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிரந்தரமான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இக் குறிக்கோளை அடைய இருதரப்பினரும் நல்லிணக்கத்திற்கு வரவேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வழிவழியாக வந்த இலங்கை அரசுகளிடம் நாம் சமாதானத்தையே வலியுறுத்தி வருகிறோம். அதற்காக பயனுள்ள வகையிலான பங்களிப்பை வழங்க நாம் தயாராக இருக்கிறோம்.

— இவ்வாறு அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் மேலும் தெரிவித்தார். [ஐ-5]

### கேரளா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்ப்புக் காரணமாகவுமே இவர் தமது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பல மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஏற்பட்ட தோல்வியினால் நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் ராவுக்கு கருணாகரனின் ராஜினாமா மேலும் நெருக்கடியைக் கொடுக்கிறது. (உ)

# மரண அறிவித்தல்கள்

## நாராயணபிள்ளை நாகலிங்கம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உதவியாளர் கூட்டுறவு, இலாகா)

மூளாயைச் சேர்ந்த நா. நாகலிங்கம் 15 - 03 - 95 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

இவர் பத்மாவதியின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஸ்ரீதரன் (மாவட்ட தொலைத்தொடர்பு பரிசோதகர், கொழும்பு), ஸ்ரீசாந்தன் (ஆசிரியர், புனித சார்ள்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), கலைச்செல்வி, ஸ்ரீகணேசன் (கிளை முகாமையாளர், ப. நோ. கூ. ச. சங்கானை), ஸ்ரீபாஸ்கரன் மஸ்கன்ஸ் லிமிட்டெட், கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரங்கநாதன் [ஜேர்மனி], கௌரி [கொழும்பு], சாந்தினி [ஆசிரியை வண் / நாவலர் மகா வித்தியாலயம்] ஆகியோரின் மாமனாரும், மயூரியின் பேரனாரும், காலஞ்சென்ற நா. கணபதிப்பிள்ளை [அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி], காலஞ்சென்ற நா. செல்லத்துரை [பதிவுபெற்ற வைத்தியர்], நா. வேலுப்பிள்ளை [ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர் வட்டு இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [18-3-1995] சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு பித்தனை மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. பத்மாவதி
[மனைவி]

''பழமுதிர்சோலை''
மூளாய். [35761]

## திருமதி
## சொர்ணலக்சுமி தவராசா

(மானிப்பாய் இந்துமகளிர் கல்லூரி பழைய மாணவி)

நவாலியூரில் வசித்தவரும், தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகக் கொண்டவருமான சொர்ணலச்சுமி 7-3-95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் தவராசாவின் (லண்டன்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இரபீந்திரநாத் (கங்கா) (வரிமதிப்பாளர்), சிவனேஸ்வரியின் அன்பு மகளும், கனகசிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், சிரஞ்சீவி நடராசா, சஞ்சீவி சௌந்தரநாயகம் (இலங்கை வங்கி, திருகோணமலை), நந்திவர்மன் மகாதேவன் (சீமன்ஸ் நிக்ஸ்டோவ் கொழும்பு), அமுதம் நெறியானந்தம் (கனடா), அவர்களின் அன்புச் சகோதரியும், ஜெயசாந்தி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி), வாசுகி (கட்டிடத் திணைக்களம் திருகோணமலை), மனோகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-3-95 அன்று ராஜகிரிய நாவலவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
சி. சரவணபவான்
(மாமன்)

''மிதிலை'' உடுப்பிராய் வடக்கு. (35766)

## வைத்திய கலாநிதி
## ஏகாம்பரநாதன் குகராஜன்

[உரிமையாளர், நாயன்மார்கட்டு கிளினிக், ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு]

நாயன்மார்கட்டு மயில்வாகனப் பண்டிதரின் வைத்திய பரம்பரையைச் சேர்ந்தவரும், நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலையின் உரிமையாளரும், முகாமையாளருமான வைத்திய கலாநிதி ஏகாம்பரநாதன் குகராஜன் 13-03 95 காலை, சென்னை அப்பலோ மருத்துவமனையிற் காலமானார்.

அன்னார் திருமதி பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இ. கார்த்திகேசு தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி ச. ஏகாம்பரநாதன், காலஞ்சென்ற திருமதி நடேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், விஜயரதி, பிரதீபன், ஞானதீபன், ஜெபரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதிகள் யோகலோசனாதேவி, வைத்திய கலாநிதி ப. ஸ்ரீஜெயதேவி, வைத்திய கலாநிதி அ. சந்திரோதயம், திருமதி க. வசந்தராணி, வைத்திய கலாநிதி ஏ. உமாகாந்தன் [நாயன்மார்கட்டு, ஆயுர்வேத வைத்தியசாலை], திருமதி ஆ. ஜயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. மு. யோகநாதன் செட்டியார் [கொழும்பு], சட்டத்தரணி சி. பஞ்சலிங்கம் [யாழ்ப்பாணம்], வைத்திய கலாநிதி அ. அரசக்கோன் [மன்னார்], திரு சி. கனகநாயகம் [கொழும்பு], திருமதி உ. ஜகதாம்பாள், திரு. வை. ஆனந்தக்குமாரசாமி [லண்டன்] ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வைத்தியகலாநிதி ஏ. உமாகாந்தன்
[நாயன்மார்கட்டு, ஆயுர்வேத வைத்தியசாலை]

(35756)

## 3ஆம் வருட
## கண்ணீர் துளிகள்



மலர்வு: 27 — 05 — 1969

உதிர்வு: 18 — 03 — 1992

## செல்வி சிவநாதன் தர்மவாணி

(அமுதா)

[யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்]

அன்பினிய அமுதாவே!

அறிவு என்னும் ஒளிவிளக்காய் – நீ
அணைந்ததினாலே
இதயத்தின் பாச ஓசைகளாய்
இனிதாய் வாழ்ந்த எம் குடும்பம்
இருளை அணைத்தவர்களானோம்
உறக்கத்திலும் உன்னை மறவா
உடன் பிறந்த உறவுகள் நாம்
உன் பிரிவால் துடிக்கின்றோம்
எதிர்பார்க்கப்பட்டதாலே
ஏமாற்றப்பட்டோம் – உன்னை
நினைவில் சுமக்கிறோம்
இன்று மட்டுமல்ல இறுதி மூச்சு வரை.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

ஆனந்த அவனியூ,
உடுவில். (35737)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன்
## வைத்திலிங்கம் குலேந்திரா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது தொட்டிலடியில் வசித்தவருமான வைத்திலிங்கம் [அலுமினியம் தொழிற்சாலை - மாவிட்டபுரம்] இராசலட்சுமி தம்பதிகளின் புதல்வன் குலேந்திரா [17.3.95] நேற்று அகாலமரணமடைந்தார். இவர் விஜித்திரா, விஜேந்திரா [பாபு], சுரேந்திரா [யூனியன் கல்லூரி பழைய மாணவன்], சுபத்திரா [ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர்தர மாணவி], கஜேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று [18 - 03 - 95] சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு தொட்டிலடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி வைத்திலிங்கம்
[தந்தையார்]

சண்ணி சைட்,
தொட்டிலடிச் சந்தி,
சண்டிலிப்பாய். [35768]

## Dr. ஏகாம்பரநாதன் குகராஜன்

Dr. ஏகாம்பரநாதன் குகராஜன் இந்தியாவில் காலமானார்.

அன்னார் நாயன்மார்கட்டு வைத்தியசாலை முன்னாள் உரிமையாளர், வைத்தியகலாநிதி காலஞ்சென்ற ச. ஏகாம்பரநாதன் நடேஸ்வரி தம்பதிகளின் மகனாவார். இறுதிக் கிரியைகள் இல 55, சேர். ஜோர்ஜ். ஆர். டி. சில்வா மாவத்தை கொட்டாஞ்சேனை, கொழும்பு என்னும் முகவரியில் இன்று சனிக்கிழமை (18 - 3 - 95) நடைபெறும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. ஸ்ரீஜெயதேவி பஞ்சலிங்கம்
(சகோதரி)

நாயன்மார்கட்டு வைத்தியநிலையம்
179, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (35763)

## திருமதி
## மீனலோசனா தேசிகநாதன்

திருநெல்வேலி தெற்கு, பலாலி வீதியைச் சேர்ந்த திருமதி மீனலோசனா தேசிகநாதன் அவர்கள் 13-03-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சுப்பையா தேசிகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சகிதா, பார்த்திபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி வனிதா சிறிகாந்தா அவர்களின் சிறிய தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 18-03-95 (சனி) காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
தே. பார்த்திபன்
[மகன்]

''அயோத்தியா''
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். [35767]

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 298/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-03-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org